**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**
**மதுரை மாநகராட்சி**

# மாமன்றக் கூட்டம்

**2010ம் ஆண்டு நவம்பர் திங்கள் 22-ம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார். ".**

**பொருள் :** உயர்ந்தோர் காட்டிய நெறியோடு பொருந்த நடப்பதே ஒழுக்கம் எனப்படுவதாம். உலக நடைமுறை ஒழுக்கத்தைக் கல்லாதவர் எவ்வளவு கற்றுத் தேர்ந்தவராயினும், உலகியல் நடைமுறையைக் கல்லாதவர் என்று கொள்ளப்படுவார்கள்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**இரங்கல் தீர்மானம்**
**மாமன்ற தீர்மானம் எண்.971**

மதுரை மாநகராட்சியில் 1978 முதல் 1984 வரை 1-வது வார்டு மாமன்ற உறுப்பினராக இருந்து வந்த திரு.சு.மணி அவர்கள் 8.11.2010-ம் தேதி மறைந்த செய்தி கேட்டு இம்மாமன்றம் கவலை கொள்கிறது. இவரது பிரிவால் துயுறும் இவரது குடும்பத்தினருக்கு என் சார்பிலும் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் இம்மாமன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

**1) மதி 1/19393/99**

மதுரை மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 51.82ச.கி.மீ உள்ளதை விரிவாக்கம் செய்து அரசு உத்தரவு வழங்க மாநகராட்சி 09.09.2010-ந்தேதிய தனது மாமன்ற தீர்மானம் எண்.964-ல் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டதில், கீழ்கண்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளை மதுரை மாநகராட்சியுடன் இணைத்து விரிவாக்கம் செய்து அரசாணை (நிலை) எண்.220, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்:28.09.2010 வரப்பெற்றுள்ளது.

| ***நகராட்சிகள்*** | **பேரூராட்சிகள்** | ***ஊராட்சிகள்*** |
|---|---|---|
| 1.ஆனையூர் | 1.ஹார்விபட்டி | 1.மேலமடை |
| 2.திருப்பரங்குன்றம் | 2.திருநகர் | 2. உத்தங்குடி |
| 3.அவனியாபுரம் | 3.விளாங்குடி | 3.வண்டியூர் |
| | | 4. நாகனாகுளம் |
| | | 5.கண்ணணேந்தல் |
| | | 6. திருப்பாலை |
| | | 7.ஐராவதநல்லூர் |
| | | 8.சின்ன அனுப்பானடி |
| | | 9.சிந்தாமணி |
| | | 10.புதுக்குளம் பிட்– |
| | | 11.தியாகராஜ காலனி |

மேற்படி வரப்பெற்ற அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.972**
**பதிவு செய்யப்பட்டது**

**2) மநி 1/08801/2007**

மதுரை மாநகராட்சியில் திரு.எம்.மலைவேலு, தணிக்கை துணை ஆய்வாளரை ஓராண்டு காலத்திற்கு அயற்பணியின் கீழ் ஆய்வாளராக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் செயல்முறை ஆணை எண்.ப&நி1(3)61551/2010 நாள்:04.11.2010-ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.973**
**பதிவு செய்யப்பட்டது**

**3) மநி 1/29754/2009**

மதுரை மாநகராட்சியில் திரு.வி.நெடுஞ்செழியன், உதவி வருவாய் அலுவலராக 14.02.2003 முதல் 31.01.2007 வரையிலும் (4 வருடங்கள்) திரு.எம்.தாட்சாயிணி, உதவி வருவாய் அலுவலராக 07.06.2004 முதல் 01.02.2007 வரையிலும் (3 வருடங்கள் 6 மாதங்கள்) பணிபுரிந்தள்ளனர். நியமன விதிகளை தளர்வு செய்து அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு பதவி உயர்வு வழங்க 29.06.2006 நாளிட்ட மதுரை மாநகர் மன்ற தீர்மான எண்.25–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கணக்கு அலுவலருக்கான பணிஉயர்வு செய்யப்பட்டது.

உதவி வருவாய் அலுவலர்களாக பணிபுரிந்து கணக்கு அலுவலர்களாக பதவி உயர்வு செய்யப்பட்ட திருவாளர்கள் மு.தாட்சாயிணி (ஓய்வு நாள் 31.03.2008) மற்றும் வி.நெடுஞ்செழியன் (ஓய்வு நாள் 29.02.2008) ஆகியோர் கணக்கு அலுவலர்களாக பணிஉயர்வு செய்தமைக்கு அரசின் உறுதியாக்கம் வழங்கி வெளியிடப்பட்டுள்ள அரசாணை (2டி) எண்.41, நாள்:09.06.2010 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.974**
**பதிவு செய்யப்பட்டது**

**4) மதி 1/7106/2010**

அரசுக்கு சொந்தமான பொது இடங்கள், பொதுப்பாதைகள் மற்றும் பூங்காக்கள் போன்ற இடங்களில் மதம் சார்ந்த கோவில், தேவாலயம் மற்றும் மசூதி போன்றவற்றின் பெயரால் அனுமதியற்ற மற்றும் ஆக்கிரமிப்பாக கட்டிடங்கள் செயல்படவோ அல்லது புதிய கட்டிடங்கள் கட்டவோ, இதுமுதற்கொண்டு அனுதிக்க கூடாது என்றும், மதம் சார்ந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்/இடம் மாற்றம் செய்தல்/வரன்முறை செய்தல் தொடர்பான விரிவான கொள்கை

(Comprehensive Policy) ஒன்றை உருவாக்கி அக்கொள்கைக்கு செயல்வடிவம் கொடுத்து முடிக்கும் காலத்தையும் குறிப்பிட்டு அகற்றுதல்/இடம் மாற்றம் செய்தல்/வரன்முறை செய்தல் வேண்டும் என்று உச்சநீதிமன்ற வழக்கு (SLP) எண்.8519/2006ல் வழங்கப்பட்ட தீர்ப்புரையின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.437, வருவாய்[நி.மு.6(2)] துறை நாள்:13.09.2010 வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண்.975**
**பதிவு செய்யப்பட்டது**

**5) மநி 1/17722/2000**

மதுரை மாநகராட்சி அனுப்பானடி மருந்தகத்தில் உள்ள ஆயுர்வேத மருத்துவ அலுவலர் பணியிடத்தினை 20.03.2009 முதல் நீட்டித்து நிரந்தரமாக வைத்துக்கொள்ள வரப்பெற்றுள்ள அரசாணை (2 டி) எண்.32 நாள் 18.05.2010-னை தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.976**
**பதிவு செய்யப்பட்டது**

**6)H1/1080/05**

மதுரை மாநகராட்சி மைய சுகாதாரப் பிரிவு EOC-24 மணி நேர குடும்ப நல அறுவை சிகிச்சை மையத்தில் கருத்தடை அறுவை சிகிச்சையானது ஒரு மாதத்திற்கு சுமார் 45 முதல் 50 வரை நடைபெறுகிறது.

கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய வரும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள ஒரு தாய்மார்க்கு ரூ.600/-ம் ஒவ்வொரு அறுவை சிகிச்சை செய்யும் Para Medical Staff ஒவ்வொரு நபருக்கு ரூ.390/-ம் ஆக மொத்தம் ரூ.990/-ஆக கூடுதலாக வழங்குமாறு, அரசு ஆணை எண்.165 சுகாதாரம் (ம) குடும்ப நலத்துறை நாள் :03.06.08-ன்படி ஒரு கருத்தடை அறுவை சிகிச்சைக்கு ரூ1.000/-ஆக வழங்குமாறு உத்திரவு பெறப்பட்டுள்ளது.

எனவே அறுவை சிகிச்சைக்காக நிரந்தர முன்பணம் ரூ.20,000/- வழங்கப்பட்டு வருவதை கூடுதலாக ரூ.30,000/- ஆக உயர்த்தி சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலருக்கு வழங்க மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.977**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**7) H1/33444/08**

மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு அரசு ஆணை எண்.499 நிதி (படிகள்) நாள்:15.09.98ன்படி மாதத்திற்கு இதர ஈட்டுப்படி ரூ.250/- வீதம் 01.09.98 முதல் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.

ஆனால் அரசு ஆணை எண்.236 நிதி (படிகள்) 01.6.2009–ன்படி, மருத்துவ அலுவலருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட இதர ஈட்டுப்படி மாதத்திற்கு ரூ.250/-லிருந்து ரூ.500/- ஆக உயர்த்தியதன் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண்.907/29.06.2010ன்படி, மாமன்றத்தில் தீர்மானம் ஒப்புக் கொள்ளப்பட்டது.

மேற்படி அரசு ஆணை எண்.236-ல் கிராமப்புற குடும்ப நல மையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலருக்கு மட்டும் ரூ.250/-லிருந்து ரூ.500/-ஆக உயர்த்தி வழங்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசு ஆணை மாநகராட்சியில் பணிபுரியும் மருத்துவ அலுவலருக்களுக்கு பொருந்தாது.

எனவே மாமன்ற தீர்மான எண்.907/29.06.10ல் ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்து, மாநகராட்சியில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு இதர ஈட்டுப்படி மாதத்திற்கு ரூ.250/- மட்டும் 01.06.2009 முதல் வழங்குவதற்கு மீண்டும் மாமன்ற கூட்டத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையார் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.978**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8)HF1/9167/10**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.3-ல் மருத்துவ அலுவலராகப் பணிபுரியும் திருமதி.C.ஸ்ரீகோதை அவர்கள் பணியில் சேர்ந்து 10 வருடங்கள் முடிந்து விட்டதால் அவருக்கு 20.03.2010 முதல் ரூ.15600-39100 என்ற ஊதிய விகிதத்தில் தேர்வு நிலை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.979**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**9)HF1/12064/10**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.5-ல் மருத்துவ அலுவலராகப் பணிபுரியும் திருமதி.M.ஜெயலெட்சுமி அவர்கள் பணியில் சேர்ந்து 20 வருடங்கள் முடிந்து விட்டதால் அவருக்கு 30.04.2010 முதல் ரூ.15600-39100 என்ற ஊதிய விகிதத்தில் சிறப்பு நிலை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.980**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**10)HF1/9168/10**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.2-ல் மருத்துவ அலுவலராகப் பணிபுரியும் திருமதி.K.S.ப்யூலாதேவி அவர்கள் பணியில் சேர்ந்து 10 வருடங்கள் முடிந்து விட்டதால் அவருக்கு 23.03.2010 முதல் ரூ.15600-39100 என்ற ஊதிய விகிதத்தில் தேர்வு நிலை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.981**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**11)HF2/9170/10**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.12-ல் மருத்துவ அலுவலராகப் பணிபுரியும் திருமதி.V.வான்மதி அவர்கள் பணியில் சேர்ந்து 10 வருடங்கள் முடிந்து விட்டதால் அவருக்கு 16.03.2010 முதல் ரூ.15600-39100 என்ற ஊதிய விகிதத்தில் தேர்வு நிலை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.982**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12)HF2/08780/10**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.11-ல் மருத்துவ அலுவலராகப் பணிபுரியும் திருமதி.M.சந்திராதேவி அவர்கள் பணியில் சேர்ந்து 10 வருடங்கள் முடிந்து விட்டதால் அவருக்கு 20.03.2010 முதல் ரூ.15600-39100 என்ற ஊதிய விகிதத்தில் தேர்வு நிலை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.983**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**13)HF2/8781/10**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.10-ல் மருத்துவ அலுவலராகப் பணிபுரியும் திருமதி.S.ஜீனத் அவர்கள் பணியில் சேர்ந்து 10 வருடங்கள் முடிந்து விட்டதால் அவருக்கு 20.03.2010 முதல் ரூ.15600-39100 என்ற ஊதிய விகிதத்தில் தேர்வு நிலை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.984**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**14)HF2/8782/10**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.16-ல் மருத்துவ அலுவலராகப் பணிபுரியும் திருமதி.K.R.ஷாலினி அவர்கள் பணியில் சேர்ந்து 10 வருடங்கள் முடிந்து விட்டதால் அவருக்கு 24.03.2010 முதல் ரூ.15600-39100 என்ற ஊதிய விகிதத்தில் தேர்வு நிலை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.985**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**15)HF1/25757/10**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.8-ல் மருத்துவ அலுவலராகப் பணிபுரியும் திருமதி.M.S.வசந்தி அவர்கள் பணியில் சேர்ந்து 10 வருடங்கள் முடிந்து விட்டதால் அவருக்கு 18.07.2010 முதல் ரூ.15600-39100 என்ற ஊதிய விகிதத்தில் தேர்வு நிலை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.986**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**16)H4/12318/10**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு ஞானஒளிவுபுரம் மருந்தகத்தில் மருத்துவ அலுவலராகப் பணிபுரியும் Dr.P.V.புவனேஸ்வரி அவர்கள் பணியில் சேர்ந்து 20 வருடங்கள் முடிந்து விட்டதால் அவருக்கு 03.05.2010 முதல் ரூ.15600-39100 என்ற ஊதிய விகிதத்தில் சிறப்பு நிலை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.987**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**17) மதி 1/21685/2010**

மதுரை வடக்கு வட்டம் தல்லாகுளம் கிராமம், சர்வே வார்டு XVI, பிளாக் எண் 7, நகர புல எண் 3/2 மற்றும் 4/1ல் கட்டுப்பட்ட கொடிக்குளம் கண்மாய் மற்றும் நகர புல எண் 4/2ல் கட்டுப்பட்ட மயானம் ஆக மொத்தம் 83.71 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தினை அண்ணா பல்கலைக்கழகம் கட்ட நில உரிமை மாற்றம் செய்ய மாநகராட்சி தீர்மானம் அனுப்பி வைக்க மதுரை வடக்கு வட்டாட்சியர் கடிதம் நகஎண்.10418/2010அ3/நாள்:12.07.2010ல் கோரியுள்ளார். மேலும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் நக32604/2010/Y2, நாள்:02.09.2010ல் அண்ணா பல்கலைக்கழகம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண்.398 வருவாய் (நி.மு.7) துறை நாள்:19.08.2010ல் முன்நுழைவு அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதால் மேற்படி இடம் மாநகராட்சி எல்கைக்குள் வருவதால் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு நில மாற்றம் செய்வதற்கு மதுரை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் விவாதித்து விவாதத்தின் முடிவில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி நிலம் மாநகராட்சியால் பராமரிக்கப்படும் சர்வே ஆவணங்களின்படி சர்வே எண்.3, (பழைய சர்வே எண்:56) ரோடு எனவும் சர்வே எண் 4/1 (57/1) கொடிக்குளம் கண்மாய் எனவும் சர்வே எண் 4/2 (57/2) மயானம் எனவும் தாக்கலாகி உள்ளது. மேற்படி நிலத்தில் அண்ணா பல்கலைக்கழகம் கட்டுவதற்கு மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபணையில்லையென மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண்.988**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**18) RR1/31034/2006**

மதுரை மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள உள்வட்ட சுற்றுச்சாலையில் (உத்தங்குடி முதல் கப்பலூர் வரை) செல்லும் வாகனங்களுக்கு சுங்க கட்டணம் வசூல் செய்து கொள்ள மாமன்ற தீர்மானம் எண் : 225/09.06.2000 மற்றும் அரசாணை எண்.149 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் : 23.10.2000ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்தரவுகளின்படி 01.11.2000 முதல் 31.10.2007 முடிய ஒவ்வொரு ஆண்டும் 8 சதவீதம் உயர்த்தியும் 01.11.2007 முதல் 31.10.2008 ஒரு வருடத்திற்கு கட்டணம் உயர்வு செய்யப்படாமலும் 01.11.08 முதல் 31.10.10 முடிய மாமன்றத் தீர்மானங்கள் 566/ நாள்: 25.09.08 மற்றும் 775/ நாள் : 24.09.09-ன்படி 8% உயர்வு செய்தும் டெக்ஸ்கோ பணியாளர்கள் மூலம் தொடர்ந்து சுங்க கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

01.11.2010 முதல் உள்வட்ட சுற்றுச்சாலையில் செல்லும் வாகனங்களுக்கு தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் கட்டணத்தில் எத்தனை சதவீதம் உயர்த்தலாம் என்பதற்கும் மேலே கண்டுள்ள அரசாணை பத்தி 10(இ)–ல் தெரிவித்துள்ளவாறு சுங்க கட்டண வசூல் பணியை டெக்ஸ்கோ பணியாளர்களைக் கொண்டே வசூல் செய்யலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**குறிப்பு** :

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் வழங்குதுறை அரசாணை எண் : 149 நாள் : 23.10.2000 பத்தி 10(எ)–ல் உள்ளபடி 5 ஆண்டுகள் முடிந்த பின்னர் ஒவ்வொரு ஆண்டிற்கும் 8% உயர்வு செய்யும் முறை குறித்து முடிவு மேற்கொள்ளப்படவேண்டும்.
2. மேற்படி அரசாணை 10 (ஐ)–ல் கடனுக்காக வசூல் செய்யும் சுங்க கட்டணம் போதுமானதாக இருக்கும் பட்சத்தில் வருடாந்திர உயர்வு 8%-ஐ தொடர வேண்டுமா அல்லது குறைக்கப்பட வேண்டுமா என்றும் 01.11.2010 முதல் 31.10.2011 முடிய ஓராண்டிற்கு டெக்ஸ்கோ மூலம் வசூல் பணிகள் செய்ய முடிவு மேற்கொள்ளப்படவேண்டும்.

3. மேலும் மேற்படி அரசாணை பத்தி 10(இ)—ல் முதல் ஓராண்டுக்கு டெக்ஸ்கோ மூலம் வசூல் செய்யலாம் என்றும் பின்னர் திறந்த ஒப்பந்த புள்ளி மூலம் தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் வசூல் செய்வது குறித்தும் முடிவு மேற்கொள்ளப்படவேண்டும்

(மாமன்ற தீர்மான எண் :225/-09.06.2000 அரசாணை எண்: 149/23.10.2000 மற்றும் தற்போதுள்ள கட்டண விகிதங்கள் கோப்பில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன)

**<u>மாமன்ற தீர்மானம் எண்.989</u>**
**<u>8% சதவீதம் உயர்வு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

(ஒம்...)ஜி.தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : 22.11.2010

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2010ம் ஆண்டு நவம்பர் திங்கள் 22-ம் நாள் திங்கட்கிழமை காலை 12.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) சி.டபிள்யு.3/ 14189 /2010**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி 03.11.2010-ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண்.990**
**பதிவு செய்யப்பட்டது**

**2) சிடபிள்யு3/34162/2006**

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை வ.உ.மேயர் அவர்களின் பாதுகாப்பு பணிக்காக சேவைக் கட்டண அடிப்படையில் பணியாற்றும் திரு.U.V.மீனாட்சி சுந்தரம் டெக்ஸ்கோ பணியாளரை 01.10.2010 முதல் 30.09.2011 வரை மேலும் ஓராண்டிற்கு நீடிப்பு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.991**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**3)ம.பொ1/25691/10**

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு கட்டுப்பாட்டில் தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் கழகத்தை சார்ந்த (Texco-Chennai,The Government of Tamilnadu Undertaking) பணியாளர்கள் கீழ்கண்டுள்ளபடி பணிபுரிந்து வருகின்றார்கள்.

| | | |
|---|---|---|
| 1) காவலர்கள் (Security Guard) | – | 19 நபர்கள் |
| 2) ஓட்டுநர்கள் (Driver) | – | 12 நபர்கள் |
| 3) மெக்கானிக்(Mechanic) | – | 13 நபர்கள் |
| 4) தலைமை காவலர்கள் | – | 2 நபர்கள் |
| மொத்த பணியாளர்கள் | – | 46 நபர்கள் |

அரசு ஆணை எண்.511, நாள் :10.06.2010-ல் Public (Ex-servicemen) Department TEXCO பணியாளர்களுக்கு அகவிலைப்படியின் பேரில் கீழ்கண்டவாறு (01.01.10 to 31.03.10) மற்றும் 01.04.10 முதல் ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

| வ.எண் | பதவி | தற்போது வழங்கப்படும் ஊதியம் ரூ. | 01.01.10 முதல் வழங்க வேண்டிய ஊதியம் ரூ. | 01.04.10 முதல் வழங்க வேண்டிய ஊதியம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | காவலர் | 5582- | 6597- | 7191- |
| 2 | மெக்கானிக் | 6796- | 7811- | 8405- |
| 3 | ஓட்டுநர் | 6796- | 7811- | 8405- |
| 4 | தலைமை காவலர் | 6796- | 7811- | 8405- |

மேற்கண்ட ஊதியத்திற்கு சேவை கட்டணம் 12%, சேவை வரி 10%, கல்வி வரி 2%, உயர்நிலை பள்ளி கல்வி வரி 1% வழங்க வேண்டியுள்ளது.

எனவே மேற்படி நிறுவனத்திற்கு மேலே குறிப்பிட்டுள்ள விபரப்படி ஊதியம் மற்றும் நிலுவைத் தொகையினையும் வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.992**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**4) CW3/32411/10**

அரசாணை(ப) எண்.372 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:30.07.1997ல் அனைத்து நகராட்சிக்குட்பட்ட சாலைகள் பேருந்து நிலையங்கள் பெயர் மாற்றுதல், பெயரிடுதல் போன்ற செயற்குறிப்புகளை ஒத்திவைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அரசாணை(நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:30.06.1998ல் பெயர் வைப்பதில் பல பிரச்சனைகள் உருவாகின்ற காரணத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுரைகளை வலியுறுத்த மாநகராட்சிகள் உட்பட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் புதிதாக பெயர் வைப்பது, ஏற்கனவே உள்ள பெயரை மாற்றுவது குறித்த தீர்மானங்களை இயற்றி அரசுக்கு அனுப்புவதை தவிர்க்குமாறு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அரசாணை(ப) எண்.573, நாள்:14.12.2001ல் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான கட்டிடங்கள், சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையங்கள் முதலியவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது போன்ற தீர்மானங்களை தவிர்க்க வேண்டும் என்றும், மேற்படி அரசாணைகளை தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மாந2) துறை, கடித எண்.21870/மாந2(2)/2010-1 நாள்:7.10.2010 மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.993**
**பதிவு செய்யப்பட்டது**

**5)ம.நி.1/11259/2003**

மதுரை மாநகராட்சிக்கு எதிராக நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ள வழக்குகளை கண்காணிக்கவும், தக்க ஆலோசனைகள் வழங்கவும் மதுரை மாநகராட்சிக்கு சட்ட அலுவலர் நியமனம் செய்ய வேண்டிய அவசியத்தைக் கருத்திற் கொண்டு, அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் ம்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:12.05.1998ன்படி தோற்றுவிக்கப்பட்ட ஒரு சட்ட அலுவலர் பணியிடத்திற்கு சட்ட அலுவலராக பணியாற்ற விருப்பம் தெரிவித்த மாநகராட்சி பணியாளர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் தயார் செய்யப்பட்டு கண்காணிப்பாளர் பணியிடத்தில் கல்வித்தகுதி பெற்றவர்கள் எவரும் இல்லையாதலால் திரு.எம்.சவரிமுத்து தேர்வு நிலை தண்டலரின் விண்ணப்பத்தினை மட்டும் பரிசீலனை செய்து விதிகளை தளர்த்தி தக்க தளர்வாணை வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாமன்ற தீர்மானம் எண்.248 நாள்:01.08.2005ல் “திரு.M.சவரி முத்து மற்றும் திரு.எ.ராஜ் ” ஆகிய இருவரில் பணி முதிர்ச்சி அடிப்படையில் ஒருவரை சட்ட அலுவலராக நியமிக்க அரசுக்கு பரிந்துரைத்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. என தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதன் பேரில் இவ்வலுவலக 31.08.2005ந் தேதிய கடிதத்தின் வாயிலாக பணி மூப்பின் அடிப்படையில் திரு.மு.சவரிமுத்து தேர்வு நிலை வரித்தண்டலரின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து விதிகளை தளர்த்தி சட்ட அலுவலராக நியமனம் செய்ய அரசாணை பெற்று தருமாறு அரசுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதனிடையில் இவ்வலுவலக மநி.1/11259/2003 எண்ணிட்ட 09.09.2005ந் தேதிய குறிப்பாணையின்படி வரித்தண்டலராக பணியாற்றிய திரு.மு.சவரிமுத்து மாநகராட்சியில் காலியாக இருந்த சட்ட அலுவலர் பணியிடத்தில் பணியேற்பாட்டின் கீழ் நிபந்தனையுடன் பொறுப்பு பார்த்து வர பணிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அரசு கடிதம் எண்.14281/MC4/07-1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 28.05.2007ந் தேதிய கடிதத்தில் திரு.மு.சவரிமுத்து என்பவரின் பொருட்டு தமிழ்நாடு மாநகராட்சி பொதுப்பணி விதிகள் 1996ல் விதி எண். 3ஐ தளர்வு செய்து அவரை மதுரை மாநகராட்சியில் சட்ட அலுவலராக பணியிலமர்த்தக்கோரி வரப்பெற்ற செயற்குறிப்புகள் அரசால் கவனமாக பரிசீலிக்கப்பட்டதில் தனியரை விதிகளை தளர்த்தி சட்ட அலுவலராக பணியிலமர்த்த தேவையில்லை எனக் கருதி செயற்குறிப்பு அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதையும்,

தனியர் நிர்வாக நலன் கருதி 31.07.2010 முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில் இவ்வலுவலக 07.09.2010ந் தேதிய செயற்குறிப்பின்படி நிர்வாக நலன் கருதி திரு.மு.சவரிமுத்து சட்ட அலுவலர் பொறுப்பு பார்த்து வர பிறப்பிக்கப்பட்ட 09.09.2005ந் தேதிய உத்தரவு ரத்து செய்யப்பட்டு அன்னாரை சட்ட அலுவலர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டதையும், மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.994**
**பதிவு செய்யப்பட்டது**

**6) ம.பொ.7/ம.எண்.24769/10**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் இணைப்புகள் இல்லாத பகுதிகளுக்கு தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு தனியார் லாரிகள் ஒப்பந்த அடிப்படை முறையில் சப்ளை செய்யப்பட்டு வருகின்றது. மேற்கண்ட பணிக்கு 2010-11-ம் ஆண்டிற்கு நாள் ஒன்றுக்கு ரூ.351/- வீதம் ஓர் ஆண்டிற்கு ரூ.61,49,250/- மதிப்பீட்டிற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது.

1) M/S.ஜெயவர்சினி டிரான்ஸ்போர்ட்
2) திரு.S.செல்லபாண்டி

மேற்கண்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகள் பரிசீலனை செய்யப்பட்டதில், M/S.ஜெயவர்சினி டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தினர் மதிப்பீடு விலை விகிதத்திற்கு 0.85% குறைவாக செய்து தருவதற்கு தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்கண்ட நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்றுக்கொண்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.995**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**7 )H4/11209/10**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு E.M.G. மருந்தகத்தில் மருத்துவ அலுவலராகப் பணிபுரியும் திருமதி.P.மணிமேகலை அவர்கள் பணியில் சேர்ந்து 20 வருடங்கள் முடிந்து விட்டதால் அவருக்கு 10.01.2010 முதல் ரூ.15600-39100 என்ற ஊதிய விகிதத்தில் சிறப்பு நிலை வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.996**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8) தெமவ5/0440/10**

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்.38 க.எண்.88, அம்மன் சன்னதி தெரு வரிவிதிப்பு எண்.69748 சிருங்கேரி குரமடம் என உள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு வரி செலுத்துவதிலிருந்து நிரந்தர வரி விதிவிலக்கு அளிக்குமாறு 20/01/10 தேதிய மனுவின் பேரில் வார்டு தண்டலர், வருவாய் ஆய்வாளர், உவ.அ ஆகியோர் மேற்படி இடத்தை நேராய்வு செய்ததில் மேற்படி இடத்தில் விஸ்வநாதர், விசாலாட்சி, சாரதம்மாள் சுவாமி சிலைகள் வழிபாட்டு தலங்களாக உள்ளது என குறிப்பு தந்துள்ளனர். அதனடிப்படையில் மாமன்றக்கூட்டத்திற்கு

7.09.10.ல் பொருள் வைக்கப்பட்டத்தில் மாமன்ற தீர்மானம் எண்.968/9.09.10-ல் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு ஒப்புதல் பெற்ற பின்பு மாமன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு 03.11.2010 கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் எண்.39 நாள்:03.11.2010 குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே வரிவிதிப்பு எண்.69748 க.எண்.88 அம்மன்சன்னதி தெரு, சிருங்கேரி குருமடத்திற்கு மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு எண். 122(A)–ன் அடிப்படையில் வரி செலுத்துவதிலிருந்து நிரந்தர வரி விலக்கு அளிப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.997</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>9) ம.வ.2/07514/2010</u>**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட மாட்டுத்தாவணியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மத்திய காய்கறி அங்காடியில், கேன்டீன் இனத்திற்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.78, நாள்:25.05.2009–ன்படி, பொறுப்பு ஒப்புடைப்பு செய்யும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு மாதாந்திர உரிமக்கட்டணம் அடிப்படையில் நடத்திக்கொள்வதற்கு ஏலம் / டெண்டர் மூலம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில், மாமன்றத் தீர்மான எண்.890, நாள்:22.04.2010–ல் கேன்டீனுக்கு மாத வாடகையாக ரூ.30,000/-மும், வைப்புத் தொகையாக ரூ.3,00,000/-ம் ஏலம் / டெண்டர் நடத்த மாமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாமன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் கேன்டீன் இனத்திற்கு 30.06.2010ம் தேதியன்று ஏலம் / டெண்டர் நடத்தப்பட்டதில், இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன, வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில், வைப்புத் தொகை ரூ.3,00,000/- உடன், மாநகராட்சி மதிப்பைவிட உயர்ந்தபட்ச கேள்வி கேட்ட திரு.V.நித்யானந்தம் என்பவரின் டெண்டர் தொகை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அன்னாருக்கு மத்திய காய்கறி அங்காடியில் 50X60=3000ச.மீ.அளவு (வடக்கு தெற்கு -50 ச.அடி, கிழக்கு மேற்கு -60 ச.அடி) காலியிடத்தினை, மாத வாடகைக் கட்டணம் ரூ.31,000/-வீதத்தில், மதுரை மாநகராட்சி 2010-2011ம் ஆண்டு ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெற்று 20.08.2010 அன்று அன்னாருக்கு கேன்டீன் நடத்த உரிமம் வழங்கியதற்கு, மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.998</u>**
**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>10) மந2/24623/10</u>**

மதுரை மாநகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகிப்பதால் மனித வாழ்விற்கும் பாலூட்டி விலங்கினங்களுக்கும், நீர்வாழ் உயிரினங்களுக்கும், பாதிப்பு ஏற்படுகின்றது, குறிப்பாக ஆண்களுக்கு மலட்டுத் தன்மையும் பெண்களுக்கு மார்பக புற்றுநோயும் ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலும் பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் (DIOXIN) டையாக்ஸின் என்ற புற்றுநோய் ஏற்படுத்தும் விஷவாயுப் பொருள் வெளியாகி அதனால் அனைவருக்கும் நுரையீரல் சம்பந்தமான நோய் ஏற்பட்டு உடல் நலம் பாதிப்படைகின்றது, இதனால் சுற்றுப்புற சூழலும் பாதிப்பு ஏற்படுகின்றது.

மேலும் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் நிலத்தடியில் சேர்வதால் பல ஆண்டுகளாக மக்காமல் இருப்பதாலும், பூமிக்கடியிலுள்ள நீர்நிலையும் மற்றும் நிலமும் பாதிப்படைந்து விவசாய உற்பத்தியும் பாதிக்கின்றது.

எனவே மதுரை மாநகராட்சி எல்லைக்குள் 20 மைக்ரானுக்கு குறைவான பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்வதற்கு தடைச்செய்யப்படுவதுடன், இம்மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள திருமண மண்டபங்கள், உணவு விடுதிகள், தேநீர் நிலையங்கள் மற்றும் இனிப்பகங்களில் ஒருமுறை மட்டுமே உபயோகப்படுத்தும் (Use and Through) பிளாஸ்டிக் டம்ளர்கள், தட்டுகள், கேரிபேக்குகள், உணவு மேசைக்கான (Dining Table paper) விரிப்புகள் போன்ற பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்துவதற்கு 01.01.2011 முதல் தடைசெய்து அறிவிப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.999</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**11)JnS2/21387/10**

மதுரை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் நகரில் விடுபட்ட பகுதிகள் / விரிவாக்கப் பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைப்பை உருவாக்கவும், பழைய சாக்கடை அமைப்புகளை புதுப்பித்தல் மற்றும் அவனியாபுரம், சக்கிமங்கலத்தில் நவீன முறையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ. 229.34 கோடியில் ஒப்புதல் செய்யப்பட்டது. மேற்கண்ட திட்டத்தினை கீழ்க்கண்டவாறு மூன்று சிப்பங்களாக பிரித்து நகராட்சி நிர்வாக ஆணையாளரின் தொழில் நுட்ப ஒப்புதல் செய்யப்பட்டது.

| சிப்பம் | திட்டத்தின் வகைகள் | தொழில் நுட்ப ஒப்புதல் தொகை (ரூ) கோடியில் |
|---|---|---|
| I | அவனியாபுரத்தில் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 125 MLD அமைத்தல் | 76.08 |
| II | சக்கிமங்கலத்தில் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 45.7 MLD அமைத்தல் | 36.50 |
| III | நகரில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைப்பை உருவாக்கவும், பழைய சாக்கடை அமைப்புகளை புதுப்பித்தல் | 135.24 |

சிப்பம் I மற்றும் II ல் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. சிப்பம் III ல் பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்கண்ட திட்டத்தை முழுமையாக செயல்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு சில உப பணிகள் அவசியம் கருதி உடனே முடிக்கப்பட வேண்டியுள்ளது. அவற்றில் குறிப்பாக.

1. தென்கரை பகுதியிலுள்ள அனைத்து கழிவு நீரேற்று நிலையங்களிலிருந்து கழிவுநீர் கொண்டுவரப்பட்டு (சந்தைபேட்டை புது மெயின் தவிர) சேகரிப்பு செய்து STP ன் Inlet Champer க்கு விசை உந்து குழாய் மூலம் 720 m தொலைவில் உள்ள STP ன் Inlet Champer க்கு கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளது. இந்த இரண்டு அமைப்புகளை இணைப்பதற்கு 1100mm விட்டமுள்ள 12KSC குழாய் தேவைப்படுகிறது. மேலும், சென்னை மெட்ரோ வாட்டர் வாரியம் (CMWSS Bd ) ஏற்கனவே அமைத்த குழாயினையும் 380 மீ தொலைவிற்கு கூடுதலாக நீட்டிப்பு செய்ய வேண்டியுள்ளது.

2. சந்தைப்பேட்டை கழிவுநீரேற்று நிலையத்திலிருந்து அவனியாபுரம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கொண்டு செல்லப்படும் பழைய வழித்தடத்தில் ஏற்கனவே கழிவு நீர் உந்து குழாய் மற்றும் அவனியாபுரம் குடிநீர் பிரதான குழாய் பதிக்கப்பட்டுள்ளதாலும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டும் மற்றும் ஒரு குழாய் பதிப்பதற்கு இயலாத நிலை உள்ளதால் வழித்தடம் மாறுதல் செய்து தற்போது கேட் லாக் ரோடு , அனுப்பானடி வீட்டு வசதி ரோடு, சிந்தாமணி ரோடு, ரிங் ரோடு, பெரியார் நகர் ரோடு, அவனியாபுரம் ரோடு வழியாக கொண்டு செல்லப்பட உள்ளது. இதனால் 800 mm PSC Pipe கூடுதலாக 4 km பதிக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்கண்ட பணிகளை செய்வதற்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி e – டெண்டர் முறையில் கோரப்பட்டு 14.10.2010 ல் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வரிசை எண் | வேலை பெயர் | பெறப்பட்ட ஓப்பந்தப் புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | அவனியாபுரம் STP ல் விசை உந்து குழாய் 1100 mm 12 KSC Pipe மற்றும் 700 mm PSC Pipe சப்ளை செய்து பதித்தல். | திரு.சுப்பையா ,சென்னை. |
| 2 | 800 mm dia X 18 KSC ,PSC Pipe 2 km சப்ளை செய்து பதித்தல். – Reach - I | M/s Indian Hume Pipe, Mumbai |
| 3 | 800 mm dia PSC Pipe 2 km சப்ளை செய்து பதித்தல். – Reach - II | M/s Indian Hume Pipe, Mumbai |

மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஒப்பந்த தொழில் நுட்ப திறனாய்வு குழுவில் 26.10.2010 அன்று ஒப்புதல் பெறப்பட்டு 16.11.2010 அன்று விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டும் அதன் பின்னர் ஒப்பந்ததாரரிடம் விலைக் குறைப்பு கேட்கப்பட்டதில் விலைக் குறைப்பு செய்ய இயலாத நிலையை கடிதம் மூலம் தெரிவித்திருந்தனர் அதன் விவரம் கீழ்க்கண்டவாறு தரப்பட்டுள்ளது.

| வரிசை எண் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) | விலைப் புள்ளி (ரூ) | விலைக் குறைப்பு (ரூ) | விலைக் குறைப்பு பின் தொகை (ரூ) | கூடுதல் சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|---|
| 1 | 99,81,700- | 1,04,09,480.30 | _ | 1,04,09,480.30 | 4.285 |
| 2 | 99,87,000 - | 99,89,611 - | _ | 99,89,611 - | 0.026 |
| 3 | 99,87,000 - | 1,04,84,290 - | _ | 1,04,84,290 - | 4.979 |

மேலே குறிப்பிட்டப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட உப மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதியும், அட்டவணையில் கண்டுள்ள வரிசை எண்களின் படி அந்தந்த ஒப்பந்ததாரருக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்த விலை விகிதத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.1000**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12)JnS2/21387/10**

மதுரை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கும், விடுபட்ட பகுதிகளுக்கும் பாதாள சாக்கடை அமைக்கவும், ஏற்கனவே உள்ள பழைய பாதாள சாக்கடைகளை புதுப்பிக்கவும், புதியதாக நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கும் மதுரை மாநகராட்சி மாமன்றம், தீர்மான எண் 39/நாள் 18.07.07ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் நகர்ப்புர மேம்பாட்டு அமைச்சகத்தின் **“ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்புக் குழு (CS&MC)” 2007–2008** வருட தரவிலை அட்டவணைப்படி **ரூ.229.34** கோடிக்கு 20.7.2007 அன்று ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்திற்கு அரசாணை 3(டி) எண் 26 நாள். 24.10.2007 அன்று ரூ. 229.34கோடி மதிப்பீட்டிற்கு மாநில அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியது. அதன் அடிப்படையில் இத்திட்டம் மூன்று சிப்பங்களாக பிரிக்கப்பட்டது. இதில் முதல் இரண்டு சிப்பங்கள் வடிவமைப்பு, கட்டுமானம்,இயக்குதல் மற்றும் ஒப்படைக்கும் திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது சிப்ப பணிகளான விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கவும், ஏற்கனவே உள்ள பழைய பாதாள சாக்கடைகளை புதுப்பிப்பதற்கும், நகராட்சி நிர்வாக இயக்குனரால், 09.06.2008 அன்று 2008–2009ம் வருட தரவிலை அட்டவணைப்படி, ரூ.135.24கோடி மதிப்பீட்டிற்கு திருத்திய தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்படட்டது. கீழ்கண்டவாறு மூன்று சிப்பங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | சிப்பம் எண் | தொழில்நுட்ப ஒப்புதல் தொகை(ரூ.கோடியில்) | ஒப்பந்தம் பெறப்பட்ட தொகை(ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | I | 72.61 | 76.08 |
| 2. | II | 34.81 | 36.50 |
| 3. | III | 135.24 | 139.62 |
| | | **242.66** | **252.20** |

மேற்கண்ட வ.எண் 1 மற்றும் 2க்கு மதுரை மாநகராட்சி நிர்வாக ஒப்புதலுக்கு உட்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி, மாமன்ற தீர்மான எண். 380 நாள். 30.04.2008ன் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. வரிசை எண் 3ல் உள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் தலைமையில் இயங்கும் ஒப்பந்தப்புள்ளி அனுமதி வழங்கும் குழு (Tender Award Committee) 09.09.2008 அன்று ஆய்வு செய்து ஒப்புதல் வழங்கியது. இந்த ஒப்புதல் படி மாமன்ற தீர்மான எண் 686 நாள் : 03.02.2009ல் மாநில ஒப்பந்தப்புள்ளி அனுமதி வழங்கும் குழு அங்கீகரித்த தொகைக்கு ஒப்புதல் வழங்கி பணி ஆணை வழங்கி உத்தரவு வழங்கப்பட்டது. இதன் படி பணிகள் நடைபெற்று வருகின்றது.

சிப்பம் எண் 1 மற்றும் 2க்கு முதல் அழைப்பிலும், சிப்பம் எண் 3க்கு மூன்றாவது அழைப்பிலும் ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி உத்தரவு பெறப்பட்டது. தரவிலை அட்டவணை மாறுதல், கட்டுமான பொருட்கள் விலையேற்றம், கட்டிடப்பணியாளர்கள் ஊதிய உயர்வு ஆகியவற்றின் காரணமாக கூடுதல் தொகை ரூ.22.86கோடிக்கு மாநில ஒப்பந்தம் வழங்கும் குழுவால் (Tender Award Committee) அனுமதி அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாமன்றம் சிப்பம் எண் 3ன் ஒப்பந்த தொகைக்கு தீர்மான எண். 686 நாள் : 03.02.2009ல் அங்கீகரிக்கப்பட்டது.

எனவே மேற்கண்ட காரணங்களுக்காக ஏற்கனவே பெறப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்கு கூடுதலாக ஏற்பட்ட தொகை ரூ.**22.86** கோடி ஆக மொத்த திருத்திய மதிப்பீடு ரூ.**252.20** கோடிக்கு மாநில அரசின் திருத்திய நிர்வாக ஒப்புதலை பெற மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.1001**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**13) JnS1/29943/06**

மதுரை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புதிதாக சாலையோரங்களில் மழைநீர் வாய்க்கால் அமைக்கவும் நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பெரிய வாய்க்கால்களில் கான்கிரீட் சுவரும் தளமும் அமைப்பதற்கு மத்திய அரசின் நகர்ப்புர மேம்பாட்டு அமைச்சகத்தின் “ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்புக் குழு (CS & MC)” 2006-2007ம் வருட தரவிலை அட்டவணைப்படி ரூ.251.81 கோடி மதிப்பீட்டிற்கு 20.04.2007 அன்று ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்திற்கு 04.05.2007 அன்று TUFIDCO நிர்வாக ஒப்புதல் வழங்கியது. மதுரை மாநகராட்சி மாமன்றம், தீர்மான எண் 69/நாள் 18.07.07ல் இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குனர் 10.10.2007 அன்று 2007-2008ம் வருட தரவிலை அட்டவணைப்படி ரூ.276.31 கோடி மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப அங்கீகாரம் 6 சிப்பங்களாக பிரித்து அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மதுரை மாநகராட்சி கீழ்கண்டவாறு ஏழு சிப்பங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | சிப்பம் எண் | தொழில்நுட்ப ஒப்புதல் தொகை(ரூ. கோடியில்) | ஒப்பந்தம் பெறப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | I | 36.98 | 46.65 |
| 2. | II | 48.49 | 62.12 |
| 3. | III | 50.09 | 62.40 |
| 4. | IV | 56.40 | 72.16 |
| 5. | V | 32.47 | 40.41 |
| 6. | VI | 50.48 | 63.89 |
| 7. | VII | 0.70 | 0.68 |
| | | **276.31** | **348.31** |

மேற்கண்ட வ.எண். 1 முதல் 6 வரை உள்ள ஒப்பந்தங்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் தலைமையில் இயங்கும் ஒப்பந்தப்புள்ளி அனுமதி வழங்கும் குழு (Tender Award Committee) 28.04.2008 மற்றும் 30.05.2008 ஆகிய தேதிகளில் ஆய்வு செய்து ஒப்புதல் வழங்கியது. இந்த ஒப்புதல்படி மாமன்ற தீர்மான எண் 377 / நாள் 30.04.2008 மற்றும் தீர்மான எண் 430 / நாள் : 27.06.2008ல் மாநில ஒப்பந்தப்புள்ளி அனுமதி வழங்கும் குழு அங்கீகரித்த தொகைக்கு ஒப்புதல் வழங்கி பணி ஆணை வழங்கி உத்தரவு வழங்கப்பட்டது.

சிப்பம் எண் 7 மதுரை மாநகராட்சி நிர்வாக ஒப்புதலுக்கு உட்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் முடிக்கப்பட்டது. சிப்பம் எண் 1 முதல் 6 வரை பணிகள் நடைபெற்று வருகிறது.

சிப்பம் எண் 1 முதல் 6 வரை உள்ள பணிகளுக்கு மூன்றாவது அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி உத்தரவு பெறப்பட்டது. தரவிலை அட்டவணை மாறுதல், கட்டுமான பொருட்கள் விலையேற்றம், கட்டிடப்பணியாளர்கள் ஊதிய உயர்வு ஆகியவற்றின் காரணமாக மூன்றாவது முறை ஒப்பந்தப்புள்ளி பெறும்போது கூடுதல் தொகை ரூ.96.50கோடிக்கு மாநில ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழுவால் (Tender Award Committee) அனுமதி அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாமன்றம் மேற்கண்ட ஒப்பந்த தொகைக்கு தீர்மான எண். 377 / நாள் 30.04.2008 மற்றும் தீர்மான எண் 430 / நாள்:27.06.2008ல் அங்கீகரிக்கப்பட்டது.

எனவே மேற்கண்ட காரணங்களுக்காக ஏற்கனவே பெறப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்கு கூடுதலாக ஏற்பட்ட தொகை ரூ.96.50 கோடி ஆக மொத்த திருத்திய மதிப்பீடு ரூ.348.31 கோடிக்கு மாநில அரசின் திருத்திய நிர்வாக ஒப்புதலை பெற மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.1002**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**14)Jn.S1/04454/10**

தற்போது இயங்கி வரும் மத்திய காய்கறி அங்காடியை விவசாயிகள் விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படையான வசதிகளுடன் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் (Tamilnadu State Agriculture Marketing Board) மூலம் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 25.74 ஏக்கர் காலி இடத்தில் சர்வே எண் டிஸ். நம்பர் 5/1, 5/2, 9/1 ( Part of Madurai Corporation மாட்டுத்தாவணி மதுரை–ல்) புதிய மத்திய காய்கறி அங்காடி கட்டுவதற்கு 33 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் மாநகராட்சி நிபந்தனைகளுக்கு உட்பட்டு காலி இடத்தை வழங்குவதற்கு மாமன்றத்தின் தீர்மான எண் 852 நாள் 22.01.2010 ஒப்புதல் வழங்கப்பட்டது.

தற்போது மாட்டுத்தாவணி அருகில் புதியதாக மத்திய காய்கறி அங்காடி சுமார் ரூ.13 கோடி மதிப்பீட்டில் பணிகள் நிறைவேற்றப்பட்டு, 01.09.2010 முதல் இயங்கி வருகிறது. எனவே மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில், மத்திய காய்கறி அங்காடி, தற்பொழுது அமைக்க தேவைப்படவில்லை. மேற்படி இடத்தில் மாநகராட்சி பொதுமக்களுக்கு தேவைக்கு தகுந்த மாதிரி புதிய திட்டம் செயல்படுத்த பரிசீலனையில் உள்ளது. எனவே மத்திய காய்கறி அங்காடி அமைக்க தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட தீர்மானம் எண் 878 நாள் 25.02.2010ஐ ரத்து செய்து, அதற்கு பதிலாக அருப்புக்கோட்டை சாலையில் அமைந்துள்ள மதுரை மாநகராட்சிக்கு சொந்தமாக உள்ள அவனியாபுரம் சர்வே எண் 307ல் உட்பிரிவு எண்கள் 1,2,3A,4,5A,6A,3C,6C,7B மற்றும் 8 ஆகியவற்றில் கட்டுப்பட்ட 6 ஏக்கர் 77 சென்ட், அயன்பாப்பாகுடி சர்வே எண் 9ல் உட்பிரிவு எண்கள் 1,2,3A மற்றும் 4A ஆகியவற்றில் கட்டுப்பட்ட 4 ஏக்கர் 63 சென்ட் ஆக மொத்தம் 11 ஏக்கர் 40 சென்ட் பரப்பில் ஏற்கனவே தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்ட நிபந்தனைக்களுக்குட்பட்டு அரசின் அனுமதி பெற்று தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கு காய்கறி அங்காடி அமைக்க மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.1003**

**15)ந.பொ. 1/34704 -/10**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 41970/10/LA 3, நாள். 28.10.10 கடிதத்தில் உட்கட்டமைப்பு இயக்குதல் மற்றும் பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி நிரப்புதல் திட்ட நிதிகளின் கீழ் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பேருந்து நிலையங்களை மேம்படுத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **I.** | **இயக்குதல் மற்றும் பராமரிப்பு திட்ட நிதி :** | | |
| 1. | வார்டு எண். 32, ஆம்னி பேருந்து நிலையம் | 99.50 | 99.50 |
| 2. | வார்டு எண். 9, பனகல் சாலை அண்ணா பேருந்து நிலையம் | 54.00 | 54.00 |
| **II.** | **அபிவிருத்தி நிரப்புதல் திட்ட நிதி :** | | |
| 3. | வார்டு எண். 6, ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் | 430.00 | 375.00 |
| | **மொத்தம்** | **583.50** | **528.50** |

மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் பார்வைக்கும் மேற்கண்ட பணிக்களுக்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மதிப்பீடுகளுக்குண்டான கூடுதல் செலவினத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் உரிய ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.1004**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**16)ம.பொ. 7 / 22465 / 10**

மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள திருமலை நாயக்கர் மஉறால் முன்புறம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை அழகுபடுத்தி மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிதியின் கீழ் அபிவிருத்தி பணிகள் மதுரை மாநகராட்சி மூலம் நிறைவேற்றவும், இனிவரும் காலங்களில் திருமலை நாயக்கர் மஉறாலை மதுரை மாநகராட்சி மூலம் பராமரிக்க வேண்டும் என்று நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசாணை (நிலை) எண். 180, நாள். 11.08.10ன் படி ரூ. 134.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசு ஆணையினை மாமன்றத்தின் பார்வைக்கும், மதிப்பீடுகள் தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு கடந்த 19.08.10ம் தேதிய மாமன்றக் கூட்டத்தில் வைக்கப்பட்டு உரிய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (மாமன்ற தீர்மான எண். 950, நாள். 19.08.2010). இவ்வொப்புதலின் பேரில் கீழ்கண்ட மதிப்பீடுகளுக்கு 16.09.10ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பு நோக்கு விலைப் பட்டியல் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்தத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு | ஒப்பந்தக்காரர்-களிடம் பெறப்பட்ட விலைக் குறைப்பு விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | ம.பொ.7/ம.எண். 291/10-11 திருமலை நாயக்கர் மகாலில் உள்ள மதுரை மாநகராட்சி சேர்மன் எல்.கே.துளசிராம் பூங்காவில் செயற்கை நீருற்று, கிரானைட் இருக்கைகள், பெயர் பலகைகள் மற்றும் மின் விளக்குகள் அமைத்தல் | 20.50 | மெசர்ஸ். பி.ஆர்.கே அசோசியேட்ஸ் | 0.01% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | திரு. லிங்கதுரை | 4.58% கூடுதல் | -- |
| 2. | ம.பொ.7/ம.எண். 292/10-11 திருமலை நாயக்கர் மகாலைச் சுற்றிலும் உள்ள வெளிபுற பகுதியில் கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு வெளிபுற பகுதிகளில் உள்ள திறந்த வெளியில் நடைபாதை மற்றும் புல்வெளி தளம் அமைத்தல். | 84.40 | திரு. பூமணி அன்னலெட்சுமி | 0.03% குறைவு | -- |
| | | | திரு.வி. முருகானந்தம் | 0.03% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.50% குறைவு |
| | | | திரு. திருப்பதி ராஜா | 1.08% கூடுதல் | -- |
| | | | திரு. லிங்கதுரை | 6.34% கூடுதல் | -- |
| 3. | ம.பொ.7/ம.எண். 290/10-11 திருமலை நாயக்கர் மஉறாலின் முன்புற திறந்தவெளி வாகன நிறுத்துமிடத்தில் பார்வையாளர்களின் வாகனங்களை நிறுத்திட கான்கீரிட் பேவர்பிளாக் அமைத்தல் | 12.90 | திரு.பி. முகைதீன் கமால் பாட்சா | 0.04% குறைவு | -- |
| | | | திரு.எஸ். ராயர் | 1.76% கூடுதல் | -- |
| 4. | ம.பொ.7/ம.எண். 293/10-11 திருமலை நாயக்கர் மஉறாலின் திறந்தவெளி உட்பகுதியில் சீரற்ற நிலப்பகுதியில் டர்பிங் செய்தல். | 5.50 | திரு.பி. முகைதீன் கமால் பாட்சா | 0.01% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |

மேற்கண்ட பணிகளுக்கான கலம் எண். 5 & 6ல் குறிப்பிட்டுள்ள குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள L 1 ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளிகளை ஏற்று பணியின் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.1005**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**17)ம.பொ. 7 / 22465 / 10**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள புராதான இடங்களை புனரமைப்பு செய்யும் திட்டத்தின் கீழ் மத்திய சுற்றுலா வளர்ச்சி நிதியின் மூலம் கீழ்கண்ட திட்டங்களுக்கு அரசு ஆணை எண்.142, நாள். 12.07.2010ன் படி ரூ. 1255.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அதன் அடிப்படையில் மதிப்பீடுகள் தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர ஏற்கெனவே கடந்த 30.07.2010 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. (மாமன்றத் தீர்மான எண். 939, நாள். 30.07.2010). இவ்வொப்புதலின் பேரில் கீழ்க்கண்ட மதிப்பீடுகளுக்கு 03.09.10, 22.09.10 மற்றும் 30.09.10 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு விலைப் பட்டியல் தயார் செய்து மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்தத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு | ஒப்பந்தக்காரர்-களிடம் பெறப்பட்ட விலைக் குறைப்பு விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | ம.பொ.7/ம.எண். 287ஆ/10-11 காலியாக உள்ள மத்திய காய்கறிஅங்காடி இடத்தில் வாகனகாப்பகம்அனைத்து வசதிகளுடன் அமைத்தல் | 472.00 | மெசர்ஸ். பால் புரேமோட்டர்ஸ் | 15.96% அதிகம் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.90% அதிகம் |
| | | | திரு. லிங்கதுரை | தொழில் நுட்ப தகுதி பெறவில்லை. ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. | |
| 2. | ம.பொ.7/ம.எண். 287அ/10-11 காலியாக உள்ள மத்திய காய்கறிஅங்காடி இடத்தில் வரவேற்பறை பாதுகாப்பு அறை மற்றும் தங்கும் அறை அனைத்து வசதிகளுடன் அமைத்தல் | 90.60 | மெசர்ஸ். பால் புரேமோட்டர்ஸ் | 17.82% அதிகம் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.90% அதிகம் |
| | | | திரு. லிங்கதுரை | தொழில் நுட்ப தகுதி பெறவில்லை. ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. | |
| 3. | ம.பொ.7/ம.எண். 286/10-11 குன்னத்தூர் சத்திரத்தில் கடைகள் அமைத்தல் | 348.00 | மெசர்ஸ். பால் புரேமோட்டர்ஸ் | 11.88% அதிகம் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.90% அதிகம் |
| | | | திரு.எம். அம்பலவாணன் | 16.65% அதிகம் | -- |
| 4. | ம.பொ.7/ம.எண். 255/10-11 அருள்மிகு மீனாட்சியம்மன் கோவிலைச் சுற்றிலும் மின்விளக்கு வசதி செய்தல் | 42.56 | மெசர்ஸ். சபரி எலெக்ட்ரிகல்ஸ் | 23.06% குறைவு | -- |
| | | | மெசர்ஸ். ராக்போர்ட் எலெக்ட்ரிகல்ஸ் | 3.147% அதிகம் | -- |
| 5. | ம.பொ.7/ம.எண். 254/10-11 மீனாட்சி பூங்காவினை அனைத்து அடிப்படை வசதிகளுடன் மராமத்து செய்தல் | 35.24 | திரு.எம். நாகேந்திரன் | 6.31% அதிகம் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | திரு.ஆர். உதயகுமார் | விலை விகிதம் குறிப்பிடப்பட வில்லை | -- |

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்தத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு | ஒப்பந்தக்காரர்-களிடம் பெறப்பட்ட விலைக் குறைப்பு விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 6. | ம.பொ.7/ம.எண். 276/10-11 பழங்கால நினைவுச் சின்னமான விளக்குத்தூண் புனரமைப்பு செய்தல் | 28.85 | திரு.எம். நாகேந்திரன் | 1.18% குறைவு | -- |
| | | | திரு.ஆர். உதயகுமார் | 0.24% குறைவு | -- |
| 7. | ம.பொ.7/ம.எண். 285/10-11 தெற்கு மண்டல அலுவலகம் இயங்கி வந்த பழங்கால கோட்டையினை சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைத்து புனரமைப்பு செய்தல் | 75.00 | திரு.ஆர். உதயகுமார் | 4.99% அதிகம் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | திரு.எம். நாகேந்திரன் | 6.00% அதிகம் | -- |
| 8. | ம.பொ.7/ம.எண். 277/10-11 அருள்மிகு மாரியம்மன் தெப்பக்குளத்தினைச் சுற்றிலும் அழகுபடுத்தும் பணி செய்தல் | 275.00 | மெசர்ஸ். டி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் | 4.89% அதிகம் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | திரு.கே.ஆர். கண்ணன் | 9.46% அதிகம் | -- |
| 9. | ம.பொ.7/ம.எண். 284/10-11 நகரின் முக்கிய இடங்களில் சாலைக் குறியீடு மற்றும் நகரின் சிறப்பினை விளக்கும் விளம்பர பலகை அமைத்தல் | 19.00 | மெசர்ஸ். ஜார்ஜ் என்ஜினியரிங் | 3.50% அதிகம் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | திரு.எம். நாகேந்திரன் | 4.99% அதிகம் | -- |
| | | | மெசர்ஸ். சன் கேஸ்டிங் & அலாய்ஸ் | 5.50% அதிகம் | -- |
| | | | திரு.ஆர். உதயகுமார் | 6.00% அதிகம் | -- |

மேற்கண்ட பணிகளுக்கான கலம் எண். 5 & 6ல் குறிப்பிட்டுள்ள குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள L 1 ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளிகளை ஏற்று பணியின் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.1006</u>**

**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>18)ம.பொ. 1 /34985 / 10</u>**

தமிழக அரசினால் அறிவிக்கப்பட்டு அமுல்படுத்திய ஆறாவது ஊதியக் குழுவில் ஏற்பட்ட முரன்பாடுகளை களையும் பொருட்டு, அமைக்கப்பட்ட **"ஒரு நபர் ஆணையத்தினால்"** உதவிப் பொறியாளர், உதவி நிர்வாகப் பொறியாளர் மற்றும் நிர்வாகப் பொறியாளர் ஆகியோர்களுக்கான கீழ்க்கண்ட அடிப்படை ஊதிய விகிதத்தினை மாற்றியமைத்து அரசு ஆணை எண். 312, நாள். 26.08.2010ன் படி கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பதவியின் பெயர் | பழைய ஊதிய விகிதம் | புதிய ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | நிர்வாகப் பொறியாளர் | 15600 – 39100 + 6600 | 15600 – 39100 + 7600 |
| 2. | உதவி நிர்வாகப் பொறியாளர் | 15600 – 39100 + 5400 | 15600 – 39100 + 6600 |
| 3. | உதவிப் பொறியாளர் | 9300 – 34800 + 4700 | 15600 – 39100 + 5400 |

மேற்கண்ட அரசாணையில் மாநகராட்சி பொறியாளர்களை தவிர்த்து பரிந்துரை செய்யப்பட்டது. தற்போது அனைத்து மாநகராட்சிகளுக்கும் நிதித் துறை கடிதம் எண். 51082/Pay Cell/2010-1, நாள். 15.09.10 ன் படி திருத்தம் செய்யப்பட்டு வரப் பெற்றுள்ளது.

மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஊதியப் பட்டியலின் படி மேற்கண்ட பொறியாளர்களுக்கு புதிய ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்து கொள்ளவும், நிலுவைத் தொகையினை வழங்கிடவும் வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.1007**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**19)ந.பொ. 1 / 25482 / 10**

மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை நிறைவேற்றப்பட்டு பழுதடைந்த சாலைகளிலும், இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தின் கீழ் மெயின் பைப் புதைக்கப்பட்ட சாலைகள் மற்றும் வெள்ள சேத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகளை சிறப்பு மராமத்துப் பணிகளை மேற்கொள்ள தற்போது தமிழக அரசினால் ”சிறப்பு சாலைத் திட்டம் 2010-11” க்கான திட்டத்தில் மதுரை மாநகராட்சிக்கென 140.00 கி.மீ. நீளச் சாலைகளை மராமத்து செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் (ந.க.கடித எண். 25910/2010/E 3, நாள். 06.08.10) கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி கீழ்க்கண்ட பணிகளுக்கு மாமன்றம் தீர்மானம் எண். 955, நாள். 19.07.10 ன்படி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக ந.க.எண். 25910/2010/E 3, நாள். 19.09.10 ம் தேதிய கடிதத்தில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கடந்த 01.11.10 அன்று பதினேழு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ரூ. 33.49 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் பதினாறு சிப்பங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின் படி ஒப்பந்தப்புள்ளிகளுக்கான தொழில்நுட்ப ஒப்பந்தங்களை கூடுதல் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் தலைமையில் தொழில் நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் சிப்பம் 16க்கு திரு.கே.ஆர். கண்ணன் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி தகுதியில்லாத காரணத்தினால் நிராகரிக்கப்பட்டது. மற்ற ஒப்பந்தங்கள் தகுதி பெற்ற காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளிகள் விலை விகிதப் பட்டியல் 12.11.10ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி மதிப்பாய்வுக் குழு முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் படி பதினாறு சிப்பங்களுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விலைப் பட்டியல் கீழ்க்கண்டவாறு வரப் பெற்றுள்ளது.

| வ. எண். | சிப்பம் எண். | ஒப்பந்தத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு | ஒப்பந்தக்காரர்களிடம் பெறப்பட்ட விலைக் குறைப்பு விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | சிப்பம் 1 | 180.75 | மெசர்ஸ். தளபதி கன்ஸ்ட்ரக்சன் | 10.06% கூடுதல் | -- |
| | | | திரு. புகழேந்தி | 6.70% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| 2. | சிப்பம் 2 | 181.30 | திரு.பி. முரளி | 9.40% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | திரு. புகழேந்தி | 11.62% கூடுதல் | -- |
| 3. | சிப்பம் 3 | 195.50 | மெசர்ஸ். தளபதி கன்ஸ்ட்ரக்சன் | 7.41% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.05% குறைவு |
| | | | திரு. புகழேந்தி | 12.00% கூடுதல் | -- |
| 4. | சிப்பம் 4 | 197.70 | திரு. பி.கே. மூக்கன் அம்பலம் | 9.86% கூடுதல் | -- |
| | | | மெசர்ஸ். பாண்டின் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி | 6.63% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.02% குறைவு |

| வ. எண். | சிப்பம் எண். | ஒப்பந்தத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு | ஒப்பந்தக்காரர்களிடம் பெறப்பட்ட விலைக் குறைப்பு விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 5. | சிப்பம் 5 | 193.15 | மெசர்ஸ். எஸ்.ஏ.எல். & கம்பெனி | 7.26% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.05% குறைவு |
| | | | திரு. புகழேந்தி | 9.95% கூடுதல் | -- |
| 6. | சிப்பம் 6 | 187.40 | மெசர்ஸ். எம்.ஏ.கே. கன்ஸ்ட்ரக்சன் | 8.07% கூடுதல் | -- |
| | | | மெசர்ஸ். அமிர்தா & கம்பெனி | 4.95% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.05% குறைவு |
| 7. | சிப்பம் 7 | 191.75 | மெசர்ஸ். எம்.ஏ.கே. கன்ஸ்ட்ரக்சன் | 6.31% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | மெசர்ஸ். அமிர்தா & கம்பெனி | 9.05% கூடுதல் | -- |
| 8. | சிப்பம் 8 | 193.70 | மெசர்ஸ். எம்.ஏ.கே. கன்ஸ்ட்ரக்சன் | 16.31% கூடுதல் | -- |
| | | | திரு.பி. முரளி | 10.14% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| 9. | சிப்பம் 9 | 194.70 | திரு.ஜே. சௌந்தர பாண்டியன் | 7.06% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | மெசர்ஸ். பாண்டின் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி | 24.20% கூடுதல் | -- |
| 10. | சிப்பம் 10 | 186.60 | திரு.வேலுச்சாமி | 10.00% கூடுதல் | -- |
| | | | மெசர்ஸ். டி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் | 5.00% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.02% குறைவு |
| 11. | சிப்பம் 11 | 191.60 | திரு. பி.கே. மூக்கன் அம்பலம் | 6.35% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | மெசர்ஸ். பாண்டின் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி | 11.03% கூடுதல் | -- |
| 12. | சிப்பம் 12 | 176.75 | மெசர்ஸ். டி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் | 4.88% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.02% குறைவு |
| | | | திரு.வேலுச்சாமி | 9.88% கூடுதல் | -- |
| 13. | சிப்பம் 13 | 188.60 | மெசர்ஸ். எம்.ஏ.கே. கன்ஸ்ட்ரக்சன் | 10.06% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | மெசர்ஸ். அமிர்தா & கம்பெனி | 15.04% கூடுதல் | -- |
| 14. | சிப்பம் 14 | 193.85 | மெசர்ஸ். பாண்டின் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி | 16.07% கூடுதல் | -- |
| | | | திரு. பி.கே. மூக்கன் அம்பலம் | 12.76% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |

| வ. எண். | சிப்பம் எண். | ஒப்பந்தத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு | ஒப்பந்தக்காரர்களிடம் பெறப்பட்ட விலைக் குறைப்பு விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 15. | சிப்பம் 15 | 190.10 | மெசர்ஸ். எஸ்.ஆர்.எம். எண்டர்பிரைசஸ் | 4.85% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | திரு.கே.ஆர். கண்ணன் | தொழில் நுட்ப தகுதி பெறவில்லை. ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. | |
| 16. | சிப்பம் 16 | 185.60 | திரு.வேலுச்சாமி | 4.96% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | மெசர்ஸ். டிடி.கே. கன்ஸ்ட்ரக்சன் | 9.96% கூடுதல் | -- |

மேற்கண்ட சிப்பங்களுக்கான கலம் எண். 6ல் குறிப்பிட்டுள்ள குறைவான விலை விகிதம் அளித்துள்ள L1 ஒப்பந்தக்காரர்களின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.1008</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**(ஒம்.) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 22.11.2010.**
**மதுரை.**

* * * * * * *

# மாமன்றக்கூட்ட குறிப்பு
# பொருள்
# Table Agenda

**1) சி.டபிள்யு.3/24780/2010**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி151.1.2010-ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண்.1009**
**பதிவு செய்யப்பட்டது**

**2) ந.பொ. 1 / 07519 / 10**

மதுரை மாநகராட்சியில் காலியாக இருந்த உதவிப் பொறியாளர் பணியிடங்களில், வரைவு அலுவலர்களாக பணிபுரிந்து வந்த கீழ்க்கண்ட பணியாளர்களை உதவிப் பொறியாளர்களாக பணி உயர்வு அடிப்படையில் நியமனம் செய்வதற்கு மாமன்ற தீர்மானம் எண். 926, நாள். 29.06.10ன் படி அரசின் உறுதியாக்கம் பெற்ற பின் ஊதிய விகிதத்தை அமுல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.

1) திரு.S. கருப்பையா
2) திரு.P. சோலைமலை
3) திரு.S. முத்துராமலிங்கம்
4) திரு.K. சரவணன்

மேற்கண்ட பணியாளர்கள் கடந்த 01.07.10 முதல் உதவிப் பொறியாளர்களாக பணிபுரிந்து வருவதாகவும், தற்போது தங்களுக்கு பணியிடத்திற்குரிய ஊதியம் வழங்கும் படியும் கோரியுள்ளனர். மேற்கண்ட பணியாளர்கள் உதவிப் பொறியாளர்களாக பணிபுரிந்து வருவதால் அன்னார்களின் கோரிக்கையை ஏற்று ஏற்கனவே மாமன்ற தீர்மானம் எண். 926, நாள். 29.06.10ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள உறுதியாக்கம் பெற்ற பின் ஊதியத்தை அமுல்படுத்த வேண்டும் என்பதற்கு பதிலாக ஊதியம் விகிதத்தை அமுல்படுத்தி அரசு உறுதியாக்கம் பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.1010**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**மேயர் பிரேரரிக்கும் பேரணை**

தமிழகத்தில் சென்னைக்கு அடுத்த பெரிய மாநகரமான மதுரையில் தற்போது ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 1000.00 கோடியில் பல்வேறு திட்டங்கள் செம்மையாக நடைபெற்று வருகின்றன. இரண்டாவது வைகை குடிநீர் திட்டம் மற்றும் வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் வெற்றிகரமாக முடிவடைந்து இம்மாநகர மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் மேற்கண்ட திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை, பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் சுமார் ரூ. 400.00 கோடி மதிப்பீட்டிற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் முன்னேற்ற நிலையில் உள்ளன. மேலும் குடிசைப்பகுதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 200.00 கோடி மதிப்பீட்டிற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளை சீரமைக்க “சிறப்பு சாலைத் திட்டம் 2010–11” நிதியின் கீழ் ரூ. 33.49 கோடி ஒதுக்கப்பட்டு இப்பணிகள் துவங்கும் நிலையில் உள்ளது. மேலும் இயக்குதல் மற்றும் பராமரித்தல், நிரப்புதல் அபிவிருத்தி மற்றும் சுற்றுலா வளர்ச்சித் துறை நிதியின் கீழ் ரூ. 30.00 கோடி மதிப்பீட்டில் தமிழக அரசு மற்றும் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்கண்ட திட்டப் பணிகள் அனைத்தையும் பார்வையிட தலைமைப் பொறியாளர் பணியிடம் அவசியம் எனக் கருதி, இம்மாமன்றத்தின் வேண்டுகோளினை ஏற்று தலைமைப் பொறியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது. இம்மாநகராட்சியிலேயே கண்காணிப்புப் பொறியாளராக பணிபுரிந்து வந்த திரு.கே. சக்திவேல் அவர்கள் 23.01.2009 தேதி முதல் தலைமைப் பொறியாளராக பதவி உயர்வு பெற்று சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார். வயது முதிர்வின் காரணமாக வரும் 31.12.2010 அன்று ஓய்வு பெறவுள்ளார். திரு.கே. சக்திவேல் தலைமைப் பொறியாளர் பதவியில் ஓய்வு பெற்ற பிறகு மீண்டும் தலைமைப் பொறியாளராக பதவி உயர்வு வழங்க மாநகராட்சி மற்றும் அரசு பணிவிதிகளின் படி தகுதி பெற்ற மாநகராட்சி பொறியாளர்கள் யாரும் தற்போது இல்லை.

எனவே இம்மாநகரில் சுமார் ரூ. 660.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மேற்கண்ட திட்டப் பணிகளை விரைவில் முடித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர இத்திட்டங்களைப் பற்றி நன்கு அறிந்தவரும், இம்மாநகரின் அடிப்படை தேவைகளை அறிந்தவருமான திரு.கே. சக்திவேல், தலைமைப் பொறியாளர் அவர்கள் 31.12.2010ம் அன்று பணியிலிருந்து ஓய்வு பெற உள்ளார்கள். எனவே, மேற்படி திட்டங்களை செம்மையாக செயல்டுத்திட ஏதுவாக திரு.கே. சக்திவேல் அவர்களை மறுநியமன அடிப்படையில் (Re-Employment Basis) 01.01.2011 முதல் அன்னாரை ஓராண்டு காலத்திற்கு மறு நியமனம் செய்ய பரிசீலிக்கும் படி தமிழக அரசினை இம்மாமன்றத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மாமன்ற தீர்மானம் எண்.1011**

(ஒம்..) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

நாள் : 22 .11.2010.
மதுரை.

* * * * * * * *